**MCOP.No. 165/2023.**

Date : 10.10.2025

Witness Name & Rank – பஞ்சவர்ணம் - PW1

சாட்சி அழைக்கப்பட்டு **3** வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்

1. விபத்து தொடர்பாக எனது மகள் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். சாலையை கடக்கும் போது தான் விபத்து நடந்தது என்றால் சரிதான். சாலையானது தென்மேற்கு சாலையாக அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது வருமானம் தொடர்பாக எந்தவிதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முத்தூட் மருத்துவமனையில் எடுத்துக்கொண்ட சிகிச்சைக்கான ஆவணங்கள் அனைத்தும் நகல் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இழப்பீடு தொகைக்காக மருத்துவ ஆவணங்கள் மிகைப்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மகன் தான் தள்ளுவண்டி வைத்து வியாபாரம் செய்து வருகிறார் நான் அது இந்த இழப்பீடு வழக்குக்காக நான் செய்வதாக தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் பூரணமாக குணமடைந்துவிட்டது என்றால் சரியல்ல. நான் தொடர் சிகிச்சையில் இருப்பதை காட்ட எந்த விதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.
2. என்னுடைய அஜாக்கிரதையால் தான் மேற்கூறிய விபத்து நடந்தது என்பதால் அதற்கு மூன்றாவது எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்லஒன்றாவது எதிர்மனுதாரர் சாலை விதிகளுக்கு உட்பட்டு மிதமான வாகன வேகத்தில் சென்ற நிலையில் மூன்றாவது எதிர்மனுதாரர் இழப்பிடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. மருத்துவ ஆவணங்கள் மிகைப்படுத்தி தாக்கல் செய்துள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(S/-)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.